கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௧] ஸ்ரீமுகஷு தைமீ [பகுதி-௩.

Vol. XXXI. January-February 1934. No. 3.

## பத்திராசிரியர் குறிப்பு.

சென்னைப் புத்தகாலயப்பிரசாரசங்கத்தார் தமிழ்வளர்ச்சிகருதிச் செய்துவரும் அரியமுயற்சிகளுள் சென்ற மார்கழிமீ 7உ (டிசம்பர்மீ 21உ) நடத்திய தமிழ்ப்புத்தகக்காட்சிவிழாவில் அதனைத் திறந்து வைத்த செந்தமிழ்ச்செல்வச் சேதுவேந்தர்பெருமானான மாட்சிமை தங்கிய R. ஷண்முகராஜேசுவர நாகநாதஸேதுபதி மன்னரவர்கள் நிகழ்த்திய விரிவுரையும், அச்சங்கத்தார் மார்கழிமீ 9உ (டிசம்பர்மீ 23உ) நடத்திய தமிழன்பர்மஹாநாட்டுக்கு மஹாகனந்தங்கிய சென்னைக்கவர்னர்துரையவர்கள் அனுப்பிய வாழ்த்துரையும், தமிழன்பர் மஹாநாட்டில் அதனைத் திறந்துவைத்த பெருங்கொடைவள்ளலான ராஜா. ஸர். அண்ணாமலைசெட்டியாரவர்கள் நிகழ்த்திய விரிவுரையும், மஹாமஹோபாத்யாய-தாக்ஷிணாத்யகலாநிதி-டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் செய்த வரவேற்புப்பிரசங்கமும் தமிழ்வளர்ச்சியிற் கருத்துடையவர்களாற் போற்றிக்கொள்ளத்தக்கனவாதலால் அவை, செந்தமிழ்நேயரும் படித்துணருமாறு அடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.

## 1933௵ டிசம்பர்௴ 21௳ சென்னைப் பச்சையப்பமுதலியார் கலாசாலையில் தமிழ்ப்புத்தகக்காட்சிச்சாலையைத் திறந்துவைத்தபோது மாட்சிமைதங்கிய R. ஷண்முகராஜேசுவர நாகநாதசேதுபதிமன்னரவர்கள் நிகழ்த்திய விரிவுரை.

தலைவரவர்களே! சீமான்களே! சீமாட்டிகளே!

இப்புஸ்தகக் காட்சிச்சாலையைத் திறந்துவைப்பதற்கு மிக்க தகுதியுடையார் இம்மாகாணக் கல்வியிலாகாத் தலைவரான மிஸ்டர் எர்லம் ஸ்மித் துரையவர்களே. தேக அசௌக்கியத்தால் துரையவர்கள் இதனை நடத்த இயலாதது வருந்தத்தக்கது. இதனைத் திறந்துவைக்கும்படி தமிழன் பர்மகாநாடு என்னைக் கேட்டுக்கொண்டதைத் தமிழ்த்தாயின் தொண்டென்றுகருதி மறுக்கவியலாமல் ஏற்றுக்கொண்டேன். இந்தக் காரியத்தில் என்னை இம்மகாநாட்டார் நியமித்ததைப் பெரிய கௌரவமாகவே கருதி அவர்க்கு யான் நன்றிபாராட்டுகின்றேன்.

ஒவ்வொருநாட்டின் முன்னேற்றமும் அதனதன் அறிவுவளர்ச்சியினாலேதான் உணரப்படும். அவ்வளர்ச்சி அந்நாட்டு நூல்களாலேயே உலகம் அறிவதாகும். அந்நூல்கள், அவற்றை இயற்றிய ஆசிரியர்கள் காலத்தோடு அழிந்துபோகாமல், எக்காலத்தும் அவர்கள் அறிவு உலகிற்குப் பயன்படும்படிசெய்யவல்லன.

இந்நூல்கள், முன்னொருகாலத்தில் கர்ணபரம்பரையாகவே வழங்கிவந்தன. பின்னர், சித்திர எழுத்துக்களில் செதுக்கப்பட்டும், சுட்ட களிமண்களிற் பதிக்கப்பட்டும் வழங்கலாயின. இப்படிப்பட்ட பாதுகாப்புக்குரிய அடையாளங்கள் பலபல தேசங்களிலும் ஆங்காங்கு அகப்படுகின்றன. இவ்வாறு நூல்களைப் பாதுகாத்த முறையில், பழைய தமிழ்நாடு எவ்விதத்திலும் மற்ற நாடுகளுக்குப் பின்னடைந்ததென்று நான் சொல்லத் துணியேன். சங்கம் வளர்த்த பாண்டியர்கள் இவ்வறிவுநூற் பாதுகாப்பில் ஊக்கத்துடன் முயன்றுவந்தனர் என்பது அவர்கள் அளித்துதவிய சங்கநூல் தொகைகளால் நன்கு அறியலாகும். தொகுத்த புலவர்பெயரும் தொகுப்பித்த அரசர்பெயரும் உடையனவாக நம்நாட்டிற் பல பெருநூல்கள் விளங்குதல் இதற்குச் சாட்சியாம். நூலையேயன்றிப் பெரும்புலவர்கள் அப்போதைக் கப்போது பாடிய விடுகவிகளையும் போற்றித் தொகுத்துப் பயன்படுத்தும்வழக்கம் இந்த நாட்டில் நெடுங்காலமாக உண்டென்பதற்கு அநேகம் அருங்கவித்திரட்டுநூல்கள் அறிகுறியாகும்.

இப்போது நவீனநாகரிகமுறையில் நமக்குக்கிடைத்துள்ள நன்மை களிலே அச்சுயந்திரசாலை ஒன்றென்பதும், அது அறிவைப் பரப்பு தற்கு உரிய சாதனம் என்பதும் பலரும் நன்கு அறிவர். அதன் துணையால் மேல்நாடுகளும், கீழ்நாட்டில் ஜப்பான்தேசமும் எவ்வளவு அறிவுமுன்னேற்றமடைந்துள்ளதென்பதை நான் கூறவேண்டியதில்லை.

நூல்நிலையத்தின்முக்கியநோக்கம், நம் முன்னோர்செய்துள்ள நூல்க ளனைத்தையும் இற்வாது பாதுகாத்துவைப்பதோடு, பொதுஜனங்கட்கு இன்றியமையாத சுகாதார அறிவு, பௌதிகவுணர்ச்சி, மருத்துவவன்மை, தொழிலறிவு முதலியவற்றைப்பற்றிய நல்ல நூல்களை இயற்றியும் பிற மொழிகளிலிருந்துமொழிபெயர்த்தும் எவருங்கையாளவைப்பதுமாகும்.

அம்முறையில், இப் புத்தகாலயம் செய்யவேண்டிய வேலை மிகவுள்ள தென்று கருதுகிறேன். நம் நாட்டில் பரோடாமஹாராஜா அவர்கள் தம் ஸம்ஸ்தானத்தில் புஸ்தகாலயப்பிரசாரம் அதிகமாகச்செய்து பொதுஜனங்களுக்குப் பயன்படுத்திவருவதைப் பத்திரிகைவாயிலாக அறிந்துவருகிறோம். அவர்களுடைய நல்வழியை நாமும் பின்பற்றி ஒழுகுவது அவசியமாகும்.

இம்மாநகரில் புத்தகாலயப் பிரசாரசங்கமொன்று அட்வொகேட் மகா-ா-ா-ஸ்ரீ கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் தலைமையில் ஏற் பட்டு இனிது நடைபெற்றுவருவது தமிழ்மக்கட்கு இன்பம் பயப்ப தாகும். இதன் அபிவிருத்தி நம் தமிழ்மக்களின் அன்பையும் விடா முயற்சியையும் ஆதரவையும் பொறுத்ததேயாம். இவர்கள் ஒன்று கூடிச்செய்யும் வேண்டுகோள், அரசாங்கத்தாராலும் மதிக்கப்பெற்றுப் பெருநன்மைகள் விளைவதற்கு ஏதுவாகும்.

புஸ்தகாலயங்களை அமைப்பதில் மேல்நாட்டுப் பெருஞ் செல்வர்கள் அளித்துள்ள நன்கொடைகள் எண்ணிறந்தன. 100-க்கு 90-க்கு மேலேயே படித்தவர்கள் உள்ள அம் மேல்நாடுகளில் இப்புஸ்தகாலய முறை அவசியமென்று கருதப்படுமானால், 100-க்கு 90 பேர் எழுதப் படிக்கத் தெரியாத நம் நாட்டிற்கு எவ்வளவாக இது வேண்டப்படும் என்பது நான் சொல்லி அறியவேண்டியதன்று.

புஸ்தகாலயம் என்பது, கண்காட்சிக்கு அழகாக நூல்களை அடுக்கி அமைக்கப்படுவதுமட்டும் அன்று. பொதுஜனங்கள் அவற்றை எளி திற் கையாண்டு வாசித்துப் பயன்படும்படிசெய்வதுமாகும். இம்முறை யைக்கருதியே, நம்முன்னோர் திருவிழாக்காலங்களிற் பலநாடும் திரண்டு

மகாமகோபாத்தியாய
...டர். உ. வே. சாமிநாதையர்

வருவதற்குரிய கோயில்களில் இப்புஸ்தகாலயங்களை வைத்துப் போற்றி வந்தனர் என்று கேள்விப்படுகிறேன். அம்முறை இன்றைக்கும் நம் நாட்டு ஜைனசமயத்தவர்கோயில்களில் இருப்பது என்று தெரிவது இன்பந்தரத்தக்கது. மேல்நாட்டார் செய்யும் அறிவுப்பிரசாரமுறையே இப்போது நாம் கையாளத்தக்கதாகும். அரிய பெரிய விஷயங்களை எளியநடையில் யாவரும் உணர அமைத்தும், அறிவும் அநுபவமும் உள்ள பெரியாரைக்கொண்டு புஸ்தகங்களின் நன்மைகளைத் தெரிவித்தும், பொதுஜனங்கள் கற்கவேண்டிய சௌகரியங்களை அமைத்தும், உபந்யாஸங்களால் அரிய விஷயங்களை விளக்கியும், நேரிடும் சந்தேகங்களைத் தெளிவித்தும், அறிவில் ஆசையைப் பொதுஜனங்கட்கு உண்டாக்கவேண்டும். ஜனங்கள் புஸ்தகாலயங்களைவிட்டுப் பிரிவதற்கு மனமில்லாதபடி இருக்கும்படியான வசதிகளை அமைக்கவேண்டும். இப்படிப்பட்ட புத்தகாலயங்கள் நம்நாட்டில் மேன்மேலுந்தழைத்தோங்கவேண்டும்.

இப்பேர்ப்பட்ட புஸ்தகாலய வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ளது இக்கண்காட்சிச்சாலை. இதைப் புதிதாகக்கூட்டப்போகும் தமிழன்பர் மகாநாட்டுக்கு முன்வைத்துப் புஸ்தகாலய சபையார் நடத்துவதே இதன் முக்கியத்தன்மையை நன்கு காட்டுகின்றது. நம் தேசத்தில் அறிவு பெருகவேண்டும் என்னும் ஆசையை உண்டுபண்ணுமளவிலாவது இப்புத்தகக்காட்சிச்சாலை பயன்தராமற்போகாது. இம் முயற்சி, ஆங்கில நூற்பழக்கம் அதிகமாகவுள்ள இத் தலைநகரத்தில்மட்டுமன்றி நாட்டுப்புறத்து ஊர்களிலும் நிகழுமாயின் இன்னும் அதிகப் பயன்விளைக்கும் என்று நம்புகிறேன். இவ் வுயர்ந்தமுறையால் அறிவைப் பரப்புதற்கு மேல்நாட்டார் கையாண்டுவரும் முயற்சியும் அடையும் பயனும் அளவிறந்தன. கிடைத்த அளவில் பலதுறைநூல்களையும் அந்த அந்தத் துறைக்கு உரிய முறையில் பகுத்து, இந்நூல்நிலயத்தைக் காட்சிக்கினியதாக வைத்திருப்பது, யாவருக்கும் அதிக மகிழ்ச்சியை விளைக்கும். 'தமிழன்பு' என்பதற்கு, 'தமிழறிவுக்குக் கருவியான நூல்களிடத்துள்ள அன்பு' என்பதே பொருள் என்று இச்சபையார் கருதிய உண்மையை இக்கண்காட்சியே இனிது புலப்படுத்துகின்றது. இந்நூற்காட்சி, இறைவனருளால் ஆண்டுதோறும் நிகழ்ந்து பல துறைகளிலும் புதிய நூற்றொகுதிகளைப் பெற்று அறிவொளி வீசி ஞானசூரியன் போல் அகவிருள் நீக்கி விளங்கவேண்டுமென்று பிரார்த்தித்து இப்புஸ்தகக்காட்சிச்சாலையைத் திறக்கின்றேன்.

உ

மஹாகனம்பொருந்திய

சென்னைமாகாண கவர்னர்துரையவர்கள்

# தமிழன்பர்மஹாநாட்டுக்கு அனுப்பிய வாழ்த்துரை.

தமிழன்பர்மகாநாட்டின் முதற்கூட்டத்திற்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி, அதைக் கூட்டுவதன் நோக்கங்களில் எனக்கிருக்கும் உள்ளன்போடுகூடிய சிரத்தையை வெளியிடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. பொதுஜனப்பிரியர்களுடைய ஆதரவின் பெருக்கத்தினால் இந்த மகாநாடு பெருநன்மைகளை அளிக்கவல்லதாகுமென்று நான் உறுதியாய்நம்புகிறேன். மாகாணத்தின் நாட்டுப்புறத்திலுள்ள ஜனங்களுக்கெல்லாம் தகுதியான புத்தகங்கள் கிடைக்கும்படி செய்வதில் உழைத்துவருகிற சென்னைப் புத்தகாலயசங்கத்தார் இந்த மகாநாட்டின் காரணகர்த்தர்களாயிருப்பது மிகப் பொருத்தமாயுள்ளது. இந்த மகாநாடு எல்லாவகையிலும் சிறப்பெய்தவேண்டுமென்பது எனது விருப்பம். தமிழ்மொழியையும் அதன் இலக்கியங்களையும் கற்பதில் அதிக ஊக்கம் உண்டாகும்படி இது தூண்டுமென்று நான் நம்புகிறேன்.

ஜியார்ஜ் ஸ்டான்லி,

சென்னைக் கவர்னர்.

(மொழிபெயர்ப்பு)

1933ஆம் டிசம்பர் மீ 23௳

## சென்னைப் பச்சையப்பமுதலியார்கலாசாலைமண்டபத்தில் தமிழன்பர்மஹாநாட்டைத்திறந்துவைத்தபோது ஆனரபிள் டாக்டர் ராஜா ஸர் அண்ணாமலைசெட்டியாரவர்கள் நிகழ்த்திய

# விரிவுரை.

தலைவரவர்களே! சீமான்களே! சீமாட்டிகளே!

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் தமிழன்பர்மகாநாடு இச் சென்னைமாநகரில் இன்று கூடுகின்றது. பிற்காலத்துப் பெருவள்ளல்களில் ஒருவராகிய பச்சையப்பமுதலியார் கல்விமண்டபத்தில், தமிழ் வளர்ச்சிக்காக இத்தமிழன்பர்மகாநாடு கூடுவது மிகப்பொருத்தமானது. இம்மகாநாட்டைத் திறந்துவைக்கத்தக்க பேராற்றல் மிக்க பெரியோர் எத்தனையோபேர்கள் நம்நாட்டில் இருக்கின்றார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். என்னிடம் அத்தகைய பேராற்றல்கள் இருப்பதாக நான் எண்ணவில்லை. ஆனால் நான் இம்மகாநாட்டைத் திறந்துவைப்பதற்கு இசைந்தது அதை ஒரு பெரும்பாக்கியமென்று கருதியேயாகும். தாய் மொழித்தொண்டுசெய்ய எனக்குச் சரியான சமயம் கிடைத்தபோது நான் அதனை எங்ஙனம் மறுக்கமுடியும்?

தமிழன்பர்களே! நம் தாய்மொழியாகிய தமிழ் மிகப் புராதனமானது; எவரும் வியக்கவல்ல ஆற்றல்வாய்ந்தது; நாகரிகம்படைத்தது; பலகலைகள் நிரம்பியது; விரிந்த நோக்கமுடையது. முடியுடைவேந்தர் மூவரும் செய்த மொழித்தொண்டுகள் கணக்கில. சங்கமிருந்து தமிழாராய்ந்தவர்கள் எத்தனையோ பெரும்புலவர்கள். சேதுபதிகள், ஜமீன்தார்கள், பிறவள்ளல்கள், மடாதிபதிகள், சைவசமயாசாரியர்கள், ஆழ்வார்கள், பௌத்த ஜைன சமயத்தவர், மகம்மதிய அறிஞர், கிறிஸ்தவ அறிஞர் முதலிய எத்தனையோபேர் பல துறைகளிலும் நம் தமிழ் மொழியை ஆதரித்துவந்திருக்கிறார்கள். இவர்கள் எங்கே எப்பொழுது எப்படி ஆதரித்தனர் என்ற விஷயத்தைப்பற்றி நான் எதையும் இப்பொழுது சொல்ல உத்தேசிக்கவில்லை.

ஆங்கிலத் துரைத்தனத்தார் நம்தேசத்தை ஆளுகின்ற இந்நாளிலே நாகரிகம் நாளுக்குநாள் பெருகிவருகின்றது. புதியபுதிய விஷயங்களெல்லாம் பிறபாஷைகளிலே தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. பிறநாடுகளெல்லாம் கல்வியில் அதிகவிரைவாக முன்னேறிவருகின்றன. நாம் மாத்திரம் ஒன்றும்செய்யாமல் இருக்கிறோம். நமது தமிழ்மொழி புதிய புதிய துறைகளில் வளர்ச்சிபெறவேண்டாமா? பழம்பெருமைபேசியே காலத்தைப்போக்கிவிடுதல் நல்லதா? நமது மக்களுக்கு அறிவு பெருக வேண்டாமா? படிக்காதவர்களின் சங்கியை இன்னும் நமதுநாட்டில் குறைந்தபாடில்லையே! இந்தவிஷயம் எந்த அறிவாளியின் நெஞ்சத்தைத்தான் புண்ணாக்காது? தமிழ், தமிழ் என்று பேசிப்பேசி நாம் காலத்தை வீணாக்கினால், புதியவழிகளில் இறங்கி நாம் எப்பொழுதுதான் உழைப்பது?

நண்பர்களே! இனித் தமிழின் தற்காலநிலைமையைப் பாருங்கள். அது மிகவும் கவலைக்கிடமாக இருக்கின்றது. ஆரம்பக்கல்வி, நடுத்தரக் கல்வி, உயர்தரக்கல்வி இம்மூன்றுக்கும் எத்தனையோ பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. தமிழுக்கும் தனியான கௌரவம் அளிக்கப்பட்டுவருகின்றது. ஆனால் அதன் அபிவிருத்தி அவ்வளவு சிலாகிக்கக்கூடியதாக இல்லை. இனி ஒருகால் அதற்கு நல்லநிலை ஏற்படலாம். தமிழ் முன்னேற்றம் அடையாததற்கு ஆங்கிலபாஷையும் துரைத்தனமுமே முக்கியகாரணமென்று சிலர் கூறலாம். அது உண்மையன்று. நாமே அதன் அபிவிருத்திக்குத் தடையாகநின்றோம் என்று சொல்வது பொருந்தும். எதற்கும் துரைத்தனத்தாரையே எதிர்பார்த்துச் சும்மா இருந்தால் ஒன்றும் நிறைவேறாது. நம்முடைய நோக்கம் இப்படியென்று அவர்கள் கண்டாலல்லவோ, அதற்குத்தக்கபடி உதவிசெய்ய முன்வருவார்கள்.

படித்தவர்கள்மாத்திரம் அறிந்து அனுபவிக்கக்கூடிய செய்யுள் நூல்களும் வசனநூல்களும் தமிழ்மொழியில் நிறைந்துகிடப்பதால், அவை பொதுமக்கட்கு அறிவைக்கொடுக்கக்கூடியவகையில் அமையவில்லையென்று சிலர் கூறலாம். ஒருகால் அது உண்மையாயிருக்கலாம். ஆங்கிலபாஷையின்கண் அறிவைத்தரக்கூடியனவும் அனைவரும் படிக்கக்கூடியனவுமான செய்யுள்நூல்கள் வசனநூல்கள் இருப்பதுபோலவே, நமது த்மிழ்மொழிக்கும் இருக்கவேண்டியது அத்தியாவசியமல்லவா? அவையில்லாத குறையை நீக்குவது இம்மகாநாட்டின்கொள்கைகளில் ஒன்றென்பதை அறிந்து நான் பெரிதும் மகிழ்கின்றேன்.

சிலர் நம்நாட்டுச் சிறுவர்களுக்கு ஆங்கிலத்தில் ஓர் ஊக்கமும் உற்சாகமும் உண்டாவதுபோலத் தமிழில் உண்டாவதில்லையே யென்று கூறுகின்றார்கள். தமிழில் வசனநடைக்கு உறுதியான நிலை இன்னும் ஏற்படாதது வருந்தத்தக்கது. எது நல்ல வசனநடை என்ற ஒரு கேள்வி ஏற்படுமானால், எத்தனைபேர் அதற்குப் பதில் சொல்லுவார்களோ அத்தனைவிதமாக அதற்குப் பதிலும் இருக்கும். இந்தநிலை மொழி வளர்ச்சிக்குப் பெரியதொரு தடையாக இருக்கின்றது. எளியநடையில் இனியசொற்களைக் கலந்து எவரும் எளிதில் அறியக்கூடியதன்மையில் எழுதவேண்டுமென்பதை மனத்திற்கொண்டு அவ்வாறு எழுதாமல் மனம்போனவாறெல்லாம் இழுத்துக்கொண்டுபோகவிடுவது பாஷையின் உயர்வுக்கு நிச்சயமாய்த் தீமையைத் தரக்கூடியது. செய்யுள் நூல்களில் வழங்கும் சொற்களைத் தேடிப்பிடித்தும் வழக்கத்திலில்லாதசொற்களைப் புதிதுபுதிதாகக் கண்டுபிடித்தும், பொருட்பொருத்தமில்லாமல் அச்சொற்களை வழங்கி, யாருக்கும் ஒன்றுமே விளங்காமல் தம் ஆற்றலை வெளிப்படுத்துதலையே பிரதானமாகக்கொண்டு, இதனைப் படிப்பவர்கள் எவர் என்பதைக் கனவிலும் கருதாமல், விடாப்பிடியோடும் ஆவேசத்தோடும் எழுதப்படும் சில புத்தகங்கள் பாஷையின் முன்னேற்றத்துக்குக் கேடுவிளைப்பனவேயாம்.

நாம் பார்க்கின்ற, உணர்கின்ற, எண்ணுகின்ற அனுபவத்திற்கேற்றவைகளுக்குப் பொருத்தமானசொற்களையே நாம் எழுதும் நடையில் பிரயோகிக்கவேண்டும். நாம் தெளிவுடன் எழுதினால் பிறருக்கும் அது தெளிவாக இருக்கும். கருத்தும் பேச்சும் ஒன்றையொன்று விட்டு என்றும் பிரிவதில்லை. நாம் இனி உண்டாக்க இருக்கும் புத்தகங்கள் உண்மையான வசனலட்சணங்கள் அமைந்து வெளிவருதல் நலம்.

நாட்டுமக்களுக்குக் காலத்திற்கேற்றபடி நல்லறிவுதரக்கூடிய நூல்களை மேல்நாட்டு அறிஞர்கள் தத்தம் மொழிகளிற் பல்லாயிரக்கணக்காக எழுதிவைத்துள்ளார்கள். தினந்தோறும் புதியபுதிய நூல்கள் வெளிவந்துகொண்டேயிருக்கின்றன. அந்த நூல்களினின்று இப்பொழுது வேண்டிய நூல்களை நல்லநடையில் மொழிபெயர்த்தால், மொழிபெயர்க்கும்போது சில சொற்களுக்குச் சரியான பிரதிபதம் நமது மொழியில் காணமுடியாது. இது இயற்கையே. சரியானசொற்கள் கிடைக்காவிட்டால், அதேசொற்களை உபயோகித்துவிடலாம். அதனால் பாஷைக்குக் குறைவென்று எவரும் கூறமுடியாது. உதாரணமாக

High Court என்னும் சொல்லைத் தமிழில் ஹைக்கோர்ட்டு என்று எழுதினால் யாருக்குத்தான் பொருள்விளங்காது? அதையே உயர்தர நீதிமன்றம் என்று மொழிபெயர்த்தால் அதில் எத்தனைபேருக்குத் திகைப்பு உண்டாகின்றது!

கல்லூரிகளிற் படிக்கும் மாணவர்க்குப் பொதுவாகத் தமிழில் நாம் எதிர்பார்க்கின்றபடி அறிவு ஏற்படுகின்றதில்லை. அதற்குக் காரணம் மாணவர்கள் தங்கட்குப் பாடமாக வைத்திருக்கும் புத்தகங்களைத்தவிர வேறுபுத்தகங்களைப் படிக்காமையே. அவர்கள் படிப்பதெல்லாம் பரீக்ஷையில் தேறுவதற்காகவே. கூர்ந்து படிக்கவேண்டுமென்ற தீவிர ஆசைதரக்கூடிய புத்தகங்கள் அதிகம் உண்டாகவேண்டும். அறிவு வளர்ச்சிக்குத் தகுந்த புத்தகங்களைப் பெருவாரியாக உண்டாக்கிக் கிராமங்கள்தோறும் "புத்தகசாலைகள் அமைக்கப்பட்டால், அந்த அந்த இடங்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தங்கள் ஓய்வுநேரங்களைத் தங்களுக்கும் தேசத்திற்கும் நலந்தரும் வழிகளில் உபயோகிக்கலாம். அவர்கட்கு அறிவு பெருகும். கிராமம் நகரம் என்று தனித்து நிற்கும் இந்த இரண்டுபிரிவுகளும் ஒன்றாகும். அந்த ஒன்றாகும்நிலையையே நாம் வேண்டுகிறோம். அதற்குப் புத்தகசாலைகள் பெரிதும் துணைபுரியும். பிறநாடுகளில் உள்ள புத்தகசாலைகளின் தொகையையும் நம்நாட்டிலுள்ள அவற்றின்தொகையையும் ஒப்பிட்டுப்பார்த்தால், நம்நாட்டில் ஒன்றுமே இல்லையென்று சொல்லத்தக்க அளவில் இருக்கின்றது. இந்தச் சமயத்தில் நம் தாய்மொழிக்குப் பலதுறைகளிலும் நம் நண்பர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் செய்துவரும் அரிய பெரிய ஊழியத்துக்காக நம் தமிழ்நாடு அவர்களிடம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறதென்று நான் சொல்வது மிகையாகமாட்டாது. ஆங்கிலபாஷையின் உயர்வையும் அதன்செல்வாக்கையும் அதன்விரிவையும் அதன் அபிவிருத்தியையும் அதனைப்பயில்வதால் வரும் நன்மைகளையும் நான் உங்கட்கு எடுத்துக்கூறுவது மிகையென்று எண்ணுகின்றேன். அத்தகைய உயர்வை நம் தாய்மொழியும் பெறவேண்டுமென்று நான் மனப்பூர்வமாய் எண்ணுவதுபோலவே யாவரும் எண்ணுவரென்பது என் துணிவு.

தாய்மொழிமூலமாகப் பொதுமக்கள் நல்லறிவுபெற்று உய்யும்படியான ஒருபெரிய இயக்கத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இவ்விஷயத்தில் ஜாதி, மதம் முதலியவற்றின் சார்பான எத்தகைய சச்சரவுகளுக்கும்

இடமில்லை. எல்லாமக்களும் நம் தாய்மொழியின்மூலமாய்ப் போதிய அறிவைப்பெற்றுவிளங்கும் அக்காட்சியைக் கண்ணாரக்கண்டு அளவிலா இன்பம் அடைவோம். தமிழே பேசட்டும், தமிழிலேயே எழுதட்டும், எங்கும் தமிழ்முழக்கமே முழங்கட்டும்.

ஒரு பாஷை இயங்கிக்கொண்டிருக்கும் நாட்டில் பிறபாஷைபேசுவோர் வந்துசேர்வதும், அந்தப் பிறபாஷையின் சொற்களும் கருத்துக்களும் அதிற் கலப்பதும் இயற்கை. அக்கலப்பினைத் தவிர்த்துவிட்டுத் தனியாகவே நிற்பேன் என்ற பாஷை எங்கேனும் தன்னலம்பேணுமா? அப்படி ஒதுங்கிநிற்கலாமா நம் தமிழ்மொழி? ஆங்கிலபாஷை இன்னணம் ஒதுங்கிநின்று உலகெலாம் மதிக்கத்தக்க உன்னதநிலையை அடைந்தது? ஆனாலும் பாஷையின் சிறப்பியல்புகளைக் குறைக்கக்கூடிய எந்தக் கலப்பும் விரும்பத்தக்கதன்று. நாம் பேசுகின்ற பேச்சில் எத்தனை ஆங்கிலச்சொற்களைக் கலந்துபேசுகிறோம். வேண்டாம் வேண்டாம் என்று தள்ளிப்பார்த்தாலும் முடிகின்றதா?

தமிழன்பர்களே! அறிவு அனைவருக்கும் பொது. அது ஒருவருக்கே உரியதன்று. அதனை ஆடவரும் பெறவேண்டும், மகளிரும் பெறவேண்டும்; ஏழையும் பெறவேண்டும், தனிகனும் பெறவேண்டும். அதனைப் பெறுதற்கு மொழியன்றோ கருவி? அதனையல்லவா நாம் போற்றல்வேண்டும்? அதுவன்றோ தழைக்கவேண்டும்? இத்தகைய பெருமுயற்சியில் வீணான மனத்தாங்கல்களுக்கு இடமேது? ஜாதி, மதம் முதலியவற்றால் இவ்வியக்கம் விலக்கப்படமாட்டாது. பேசிப் பேசிக் கழிந்தநாட்கள் எண்ணத்தொலையா. கழிந்தன கழிந்தனவே; அவற்றிற்காக வருந்தவும்வேண்டாம். எதிர்காலத்தில் நம்முடைய தாய்ப் பாஷை உன்னதஸ்திதியை அடையுமென்பது நிச்சயம். இதற்கு ஒவ்வொருவரும் தம்மாலான உதவிபுரிதல் அவசியமென்பதை நான் வற்புறுத்தவேண்டியதில்லை. ஊக்கமும் உற்சாகமும் உண்டாகிவிட்டால், அந் நற்காலம் அதி சமீபத்திலேயே வந்துவிடும். தமிழ்முன்னேற்றம் தமிழர் முன்னேற்றத்தையே பொறுத்ததாகும்.

இம்மகாநாட்டின் சார்பாக நாம் எண்ணிய எண்ணம் நிறைவேற இறைவன் திருவருளைவேண்டி இதனை நான் திறந்துவைக்கின்றேன்.

1933வரு டிசம்பர்மீ 23உ
சென்னைப் பச்சையப்பமுதலியார்கலாசாலைமண்டபத்தில்
தமிழன்பர்மஹாநாடு நடைபெற்றபொழுது
மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர்
வே. சாமிநாதையரவர்கள் செய்த

# வரவேற்புப்பிரசங்கம்.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

அக்கிராசனாதிபதியவர்களே! தமிழன்பர்களே!

தமிழ்நாட்டின் பலபாகங்களிலிருந்து இங்கே வந்து கூடியிருக்கும் உங்களுக்கு நல்வரவுகூறுகின்றேன். நீங்கள் இங்கேவந்து ஒருங்கே கூடியிருத்தற்கு உங்கள் உண்மையான தமிழபிமானந்தான் காரணமென்பதை அறிந்து பாராட்டுகின்றேன். தமிழன்பர்கள் பெரும்பாலோரை ஒருங்கே கண்டு வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததைக் குறித்து மிகவும் மகிழ்கின்றேன். தமிழ்வளர்ச்சியிலும் தமிழ்நாட்டினருடைய மனஒற்றுமையிலும் கவனத்தைச் செலுத்தும் கருத்தைக்கொண்ட உங்களுடைய நல்லுதவி இந்த மகாநாட்டைச் சிறப்புற நடைபெறச்செய்யுமென்று நம்புகிறேன்.

தமிழ்மொழியானது வளர்ச்சியடைவதற்கும் தமிழ்நாட்டினருக்குத் தமிழன்பும் தமிழ்ப்பயிற்சியும் அதிகமாக உண்டாவதற்கும் உரிய வழிகளை ஆராய்வதற்காக நாம் இப்பொழுது கூடியிருக்கிறோம். பலவேறுதுறைகளிற் சிறந்த அறிவுவாய்ந்த கலைஞர்கள் பல அரிய யோசனைகளைச் சொல்லக்கூடுமாதலின் உங்களுடைய அரியகாலத்தை நான் வீணாக்குவது உசிதமன்று; ஆயினும் எனக்குத் தோற்றிய சில கருத்துக்களை இங்கே சொல்லுவது மிகையாகாதென்று எண்ணுகிறேன்.

தமிழ்மொழியானது பல ஆயிர வருஷங்களாகப் பல உபகாரிகளால் பலவகையாக வளர்ச்சியையடைந்துவந்திருக்கிறது. அப்போதிருந்த புலவர்கள் இயற்றிய நூல்களும் உரைமுதலியனவும் தமிழ்மக்களின் நாகரிகவளர்ச்சிக்குப் பேருதவிபுரிந்திருக்கின்றன. அவற்றின் இயல்பு முழுவதையும் நாம் அறியமுடியவில்லை. அவற்றிற் பல இந்தக்காலத்தில் விளங்காதனவாக இருக்கலாம். ஆயினும், அவற்றை அக்காலத்திருந்த மக்கள் சிறந்தனவாகக்கொண்டு படித்துப் பயனடைந்துவந்திருக்கிறார்களென்பதை நாம் மறக்கக்கூடாது.

பழைய நூல்கள் உரைகள் முதலியவற்றை நாம் நன்றாகப் பயின்று அறிந்துகொள்ளவேண்டும்; அவற்றைத் தமிழ்நாட்டினர் யாவரும் நன்றாக அறிந்து பயனடையும்படிசெய்யவும்வேண்டும். பாடஞ்சொல்லுதலே அதற்கு உரிய சிறந்த முறையாகும். தமக்கு விளங்கும் சில பாடல்களும் நூல்களுமே சிறந்தனவென்றும் தமக்கு விளங்காதனவாயின் அவை குறைபாடுடையனவென்றும் சிலர் எண்ணிக்கொண்டு பழையநூல்களையும் அவற்றைப் படித்தவர்களையும் புறக்கணிக்கின்றனர். அச்செயல் ஆதரிக்கத்தக்கதன்று.

சில ஆசிரியர்களுடைய நூல்களிலும் உரைகளிலும் உள்ள கருத்துக்கள் நமக்கு உடன்பாடில்லையானால் அவற்றை அலட்சியம்செய்யாமல் அவர்கள் அங்ஙனம் கூறியதற்குரிய காரணங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து அறியவேண்டும். கால இயல்பு மாற மாற ஒரு பாஷையின் நூலமைப்புக்களும் மாறிவருவது இயல்பு. முற்காலத்தில் உள்ள சில வழக்கங்களும், சில நூல்களிற் கூறப்பட்ட செய்திகளும் இக்காலத்திற்கு ஒவ்வாதனவாக இருக்கலாம். அதனால் அவை தவறெனத் துணிந்துவிடலாகாது.

தமிழ்மொழியில் புத்தகங்களில் வழங்கும் பாஷை ஒருவிதமாகவும் பேசும்பாஷை ஒருவிதமாகவும் இருக்கின்றன. பேசும்பாஷையிற் காணப்படும் கொச்சைவார்த்தைகளை அப்படியே நூல்களில் அமைத்துக்கொள்வதும், நூல்களில் வழங்கும் பாஷையிலேயே பேசமுயல்வதும் அநுபவத்தில் நடைபெறக்கூடியனவல்ல. தமிழ்நாட்டின் பல பாகங்களில் ஒரேவகையாகத் தமிழ்வார்த்தைகள் வழங்கவில்லை. ஒவ்வொருவகுப்பார் பேசுவதிலும் வேற்றுமைகள் இருக்கின்றன. சாதி,

சமயம், தொழில், தேசம் என்பவற்றிற்கு ஏற்பச் சில சில வேறுபாடுகள் பேசும்பாஷையில் அமைந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் எழுதும்பாஷையிற் புகுத்துவதும், அவற்றைக் கொண்டு நூல் இயற்றுவதும் நினைத்த பயனை அளிக்கத்தக்கனவல்ல. ஒருவகையினர் மற்றொருவகையினருடைய வார்த்தைகள்சிலவற்றை வழங்குவதில்லை. சில இடங்களில் நல்லபொருளைக் கொடுக்கும் சிலசொற்கள் வேறு சில இடங்களிற் கெட்டபொருளையேகொடுத்தலைப் பார்க்கிறோம்.

ஆகவே தமிழ்வசனநடையை ஒருவகைப்படுத்தவிரும்பும் அன்பர்கள், 'எழுதும் பாஷை வேறாக இருக்கிறதே' என்று எண்ணுவதிற் பயனில்லை. பிழையின்றி இயன்றவரையில் யாவருக்கும் விளங்கும் சொற்களையே எழுதும் பழக்கத்தை மேற்கொள்வதே நல்ல முறையாகும். வழக்கற்ற சொற்களையும் திரிசொற்களையும் வசனநடையிற் கூடியவரையில் விலக்குதல் நன்று. தமிழ்நாட்டினர் தம் கருத்தை எளிதில் அறிந்துகொள்ளவேண்டுமென்பதை எழுதுபவர்கள் மனத்திற்கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும். பேசினாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டுமேயன்றிக் கடினநடையைக் கைக்கொள்ளுதல் கூடாது; கொண்டால், 'தமிழே கடினமானது' என்ற எண்ணம் தமிழ்மக்களுக்கு உண்டாகிவிடும்.

பழையகாலத்தில் நூல்களைப் பாடஞ்சொல்லிய ஆசிரியர்கள் மிகவும் எளியநடையிலேயே கருத்தை விளக்கிவந்தார்கள். பரம்பரையாகப் பாடங்கேட்கும்வழக்கமே அதிகமாக இருந்தமையால் அக்காலத்தில் தமிழ்வசன நூல்கள் இயற்றப்படவில்லை.

பலவருஷங்களுக்குமுன்பு இச் சென்னைநகரத்தில் துரைத்தனத்தார் 'கல்விச்சங்கம்' என ஒன்றை அமைத்துப் பல இடங்களிலிருந்து தமிழ்வித்துவான்களை வருவித்து அவர்களைக் கொண்டு தமிழ் வசன நூல்களை எழுதச்செய்தனர்; வேறுபாஷைகளிலுள்ள நூல்கள் சிலவற்றையும் தமிழில் மொழிபெயர்க்கச்செய்தனர். இத்தகைய முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்திருந்தால் தமிழ்மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாகியிருக்கும்.

பிற்காலத்தில் அச்சுயந்திரம் இந்நாட்டுக்கு வந்தபிறகு தமிழில் நல்ல வசனநூல்களை முதலில் எழுதி வெளியிட்டு உபகரித்தவர்களுள்

ஆறுமுகநாவலர் சிறந்தவர். அவர் எழுதிய பாடபுத்தகங்கள் நல்லொழுக்கத்தையும் தெய்வபக்தியையும் படிப்பவர்களுக்கு உண்டாக்கும். 'நாவல்' எனப்படும் நவீனத்தை முதலில் எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளையாவர். அவருடைய வசனநடை எளியதாகவும் சுவையுடையதாகவும் இருக்கிறது.

சென்ற முப்பதுவருஷங்களில் கணக்கற்ற வசனபுத்தகங்கள் தமிழில் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் திருத்தமான நடையை உடையவை சிலவே. மாணவர்களுக்காக எழுதப்படும் புத்தகங்கள் இக்காலத்தில் மிக அதிகமாக வெளிவருகின்றன. வகுப்பின் தரத்திற்கும் படிக்கும் கால அளவுக்கும் ஏற்றவண்ணம் திருத்தமாக அவை அமைந்தால் நன்றாக இருக்கும்.

சிலர் தாம் மேற்கொள்ளும் புதியமுறைகளை யாவரும் கைக்கொள்ள வேண்டுமென்று இக்காலத்தில் தூண்டுகின்றனர். பலருக்குப் பொதுவான பாஷையில் தங்கள் மனம்போனவாறு தம் கொள்கைகளை அவசரப்பட்டுப் புகுத்திவிடுதல் சரியன்று.

இக்காலத்தில் விருத்தியாகிவரும் சாஸ்திர அறிவு தமிழ்மக்களிடத்தும் நன்றாகப் பரவவேண்டுவது இன்றியமையாததாதலின் அத்துறையிலுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் அவசியமேயாகும். ஆனால், அவ்வகை மொழிபெயர்ப்புக்கள் ஒரே முறையாக இருக்கவேண்டும். சாஸ்திர சம்பந்தமாகவும் பொருளின் பெயர்களாகவுமுள்ள மற்றப் பாஷைச்சொற்களும் வேறு சிலவகைச் சொற்களும் இப்பொழுது சாதாரணமாகத் தமிழில் வழங்குகின்றன. அவற்றை மாற்றிப் புதிய சொற்களை உபயோகிக்கத் தொடங்கினால் அச்சொற்கள் தமிழ்நாடுமுழுவதும் வழக்கத்தில் அமைவதற்கு நெடுங்காலம் ஆகும். சொற்களின் வழக்கமும் அவற்றின் பொருள் எளிதில் விளங்குதலும் முக்கியமேயன்றி எல்லாம் தனித் தமிழ்ச்சொற்களாகவே இருக்கவேண்டுமென்பது அநுபவத்தில் இயலுவதன்று. பழைய இலக்கியங்களிற்கூடச் சில இடங்களில் வேறுபாஷைச்சொற்களை அவ்வந்நூலாசிரியர் அமைத்திருக்கின்றனர். தமிழில் எவ்வளவோ அரியசொற்கள் இருப்பினும் கருதிய பொருளை அவ்விடத்தில் நன்றாக விளக்குவதில் அச்சொற்களைப்போல மற்றவை அமையாவென்று அப்புலவர்கள் எண்ணியிருக்கலாம்.

மொழிபெயர்க்கும்பொழுது பண்டைத் தமிழிலக்கியங்களிற் கலைகளுக்குரியனவாக உள்ள சொற்களை இயன்றவரையில் உபயோகித்துக் கொள்ளலாம். பிறபாஷைச்சொற்களை எடுத்தாளும்பொழுது தமிழுக்கு ஏற்றபடி அவற்றின் உருவத்தை மாற்றிக்கொள்ளலாம். ஈரங்கி, உயில், பாதிரி, வங்கி, காபி முதலிய வார்த்தைகள் இங்ஙனமே அமைக்கப்பட்டனவாகும். சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களும், தனவைசியர்களும், யாழ்ப்பாணத்தார்களும் இவ்வகையிற் கொண்டிருக்கும் முறைகள் சிலவற்றை நாம் கைக்கொள்ளலாம். ஒரு பாஷையிலுள்ள உச்சரிப்பு வேறொருபாஷையில் வழங்கும்போது அதற்கேற்ப மாறினால்தான் பொருத்தமாக இருக்கும். பழைய இலக்கியங்களில் வடசொற்களை எடுத்தாளுகையிற் புலவர்கள் அவற்றைத் தமிழுக்கு ஏற்ப அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பண்டைக்காலப் புலவர்கள் வடமொழிப்புலவர்களோடு மனம் கலந்து பழகி அவர்களுடைய கருத்துக்களையும் சொற்களையும் தங்கள் நூல்களில் ஆண்டிருக்கிறார்கள். வடமொழியின் தொடர்பினால் தமிழ் மக்கள் எவ்வளவோ அரியகருத்துக்களை அறிந்து பயனுற்றிருக்கிறார்கள். ஒரு பாஷை வேறுபாஷையின் தொடர்பினால் விரிவுறும். அதனால் அப்பாஷையின் அழகு ஒருபோதும் குறையாது.

சர்வகலாசங்கத்தார் பல வருஷங்களுக்கு முன்பு சில அறிஞர்களைக் கொண்டு ஆராய்ச்சிசெய்து தமிழ் வசனநடையில் இன்ன இன்ன சொற்களை வழங்கலாமென ஒரு முடிவைச் செய்தார்கள். அம் முடிவிற் கண்டவற்றுள் கொள்ளத்தக்க உபயோகமான சொற்களை நாம் எடுத்தாளலாம்.

தமிழ்மக்கள் தங்கள் தங்கள் ஜீவனத்துக்குரிய பலவகை முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் யாவரும் சிறந்த இலக்கியங்களைப் படித்து இன்புறுதலென்பது இயலாத காரியம். புதிய செய்திகளோ கொள்கைகளோ இக்காலத்திற் பத்திரிகைகளின்மூலமாகவே பரிவிவருகின்றன. பத்திரிகைகளைப் படிக்கும்வழக்கம் இப்போது அதிகரித்துவருகின்றது. ஆதலின் தமிழ்ப்பத்திரிகையை நடத்துகிறவர்கள் தங்களுடைய கடமையை நன்றாக உணர்ந்து தேசக்ஷேமத்தையும் பாஷையின் நன்மையையும்கருதித் தமிழ்ப்பயிற்சியுள்ளவர்களை உடன்வைத்துக்கொண்டு உழைத்துவருதல் தமிழகத்துக்குப்

பாமோபகாரமாக இருக்கும். எந்தப் பொருளும் அதற்குரிய லக்ஷணங்களுடன் அமைந்திருந்தால்தான் அதனை நாம் மதிக்கிறோம்; இல்லையாயின் வெறுக்கிறோம். பாஷைவிஷயத்தில்மட்டும் அந்தக் கொள்கைக்கு விலக்கு உண்டென்பது முறையாகாது.

சிலவருஷங்களுக்குமுன்வரையில் தமிழின்நிலைமை மிகச் சிறந்ததாகவே இருந்தது. அரசாட்சிமாறுபாடுகளிலும் காலவேறுபாடுகளிலும் தமிழ்ப்பாஷைக்குக் குறைபாடு நேரவேயில்லை. மகம்மதியர் முதலியவர்களுடைய அரசாட்சியிற்கூடத் தமிழ்மொழிக்குரிய சிறப்பானது குறையவேயில்லை. பிற்காலத்திலும் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய இடங்களிலுள்ள மடங்களும், ஸேதுஸமஸ்தானம் முதலிய ஸமஸ்தானங்களும் தமிழ்வித்துவான்களை ஆதரித்துத் தமிழ்வளர்ச்சிக்குரிய காரியங்களைச் செய்துவந்திருக்கின்றன. இந்த ஆங்கில அரசாட்சியில் துரைத்தனத்தாரும் சர்வகலாசாலையாரும் பாஷையின் அபிவிருத்திக்குரிய உதவிகள் பலவற்றைச் செய்துவந்தும், நம்மவர்களே பலவகையான தக்க உத்தியோகங்களை வகித்து நாட்டின் நலத்துக்கு உரிய காரியங்களைச் செய்யும் நிலையில் இருந்தும், நூல்கள் பரவுவதற்குரிய அச்சுமுதலிய சாதனங்கள் மலிந்திருந்தும், தமிழ்நூற்பயிற்சி இப்போது மாறுபட்டிருப்பதுபோல வேறு எக்காலத்திலும் இருந்ததில்லை. இந்த நிலையைப் போக்குவதற்குரிய வழிகளைப்பற்றி இங்கே உள்ள அறிஞர்கள் ஆராய்ந்து, செய்கையில் நடைபெறக்கூடியவற்றை மேற்கொண்டால் நலமாயிருக்கும்.

தமிழ்நாட்டார் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் தமிழ்ப்பாஷையையே உபயோகிக்கவேண்டும். ஆங்கிலமறிந்தவர்களிற் பெரும்பாலோர் ஆங்கிலத்திலே நினைக்கிறார்கள்; அவர்களால் ஆங்கிலச்சொற்கள் கலவாமற் பேசமுடியவில்லை. இத்தகைய நிலை ஒரு பெருங்குறையல்லவா? ஆங்கிலம்படித்தவர்களிற் பெரும்பாலோர் கடிதங்களைத் தமிழில் எழுதும் பழக்கத்தை அடியோடே விட்டுவிட்டார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் மிக அழகாகவும் மற்றவர்கள் வியக்கும்படியாகவும் பேசியும் எழுதியும் வருகிறார்கள். அம்முயற்சிகளையே தாய்மொழியிலும் கொள்ளுதல் முதற்கடமையன்றோ? ஜி. யூ. போப் முதலிய வேற்றுநாட்டினர்கள்கூடத் தமிழின் இனிமையையுணர்ந்து அதிலுள்ள பழைய நூல்களை மிக உழைத்துப் படித்து அறிந்து மகிழ்ந்திருக்கிறார்கள்;

தமிழ்ப்பயிற்சியுள்ளவர்களுக்கு அவர்கள் ஊக்கமளித்தும்வந்திருக்கிறார்கள். தமிழர்களாகிய நாம் அத்தகைய முயற்சிகளைச் செய்ய வேண்டிய அளவு செய்யாமலிருக்கிறோம். ஆங்கிலம் அறிந்த தமிழர்கள் தமிழிற் பேசப் பழகிவிட்டால் தங்களுடைய கருத்தை நன்றாக வெளியிடமுடிகிறதென்றும் ஊக்கம் உண்டாகிறதென்றும் சொல்லுகிறார்கள்; ஆதலின் அச்செயலை யாவரும் விடாமல் மேற்கொள்ளுதல் நலம்.

தமிழ்நூல்களைத் தக்க அறிஞர்களைக்கொண்டு வெளியிட முயற்சி செய்யவேண்டும், ஒருவர் மேற்கொண்டமுயற்சியையே பலர் மேற்கொண்டு உழைப்பதைக்காட்டிலும் பலவகைமுயற்சிகளில் ஈடுபட்டு உழைத்தால் தமிழ் பலதுறையிலும் விருத்தியடையும். ஒருவர் உழைப்பினாற் செய்த ஒன்றையே பலவேறுவகையிற் கைக்கொண்டு பல உருவத்தில் தம்முடைய உழைப்பின்பயனாக வெளியிடுதல் முறையாகாது; தமிழறிஞர்கள் தங்களுடைய ஆற்றலைத் தனித்தனியே காட்டும் முயற்சிகளைச் செய்யவேண்டும்.

பண்டைக்காலத்துத் திண்ணைப்பள்ளிக்கூடங்களில் தமிழ்க் கணிதவகைகளையும் நிகண்டுகளையும் இன்றியமையாத இலக்கிய இலக்கணங்களையும் கற்பித்துவந்தனர். பழைய முறைப்படி பாடங்கேட்டவர்களுக்கு அவை உபயோகமுள்ள நூல்களாக இருந்தன. சங்கநூல்கள் வரையில் அவர்கள் தங்கள் பயிற்சியை முறையாகவே வளர்த்துவந்தனர். அந்தமுறை இப்பொழுது அடியோடு போய்விட்டது. அதனால் தான் பாஷையில் அபிமானமும் குறைவுபட்டது.

முறையாகப் பாடஞ்சொல்லுதலும் பாடங்கேட்டலும் மலிந்திருந்தகாலத்திலேதான் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய பெரும்புலவர் இருந்தனர் என்பதை நாம் எண்ணவேண்டும். அவர்களைப் போன்றவர்களை இக்காலத்திற் பார்க்கவேமுடியாது. இப்பொழுது பாஷை உள்ள நிலையில் இனியும் பார்த்தல் அரிதெனத் தோற்றுகிறது. நூல்முற்றும் படித்து அறிவதற்குள் ஆராய்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும் சொல்லத்தொடங்கும் இயல்பு இக்காலத்தில் வளர்ந்துவருகிறது. தாம் படித்ததே போதுமென்ற திருப்தியும் பலருக்கு உண்டாகின்றது. சில நூல்களைப் படித்த பயிற்சியினால் விரிந்துள்ள தமிழ்ப்பாஷையிலேயே திருத்தம்செய்ய அவர்கள் முற்பட்டுவிடுகிறார்கள்.

பாடஞ்சொல்லுதலின் அவசியத்தை நன்றாகத் தமிழ்நாட்டார் உணரவேண்டும். பாடங்கேட்பதால் அறிந்துகொள்ளும் பல அரிய இரகசியங்களை எவ்வளவு சிறந்த அறிவுடையவராக இருப்பினும் தாமாக வே படித்து அறிந்துகொள்ள இயலாது. முறையாகப் பாடங்கேட்டவர் களுக்கும் தாமே படித்தவர்களுக்கும் எந்தக்காலத்திலும் வித்தியாசம் இருப்பதைக் காணலாம்.

எந்தத்துறையில் நாம் ஒரு முயற்சியைச் செய்யத்தொடங்கி ஞலும் அந்தத்துறையில் வல்ல அறிஞர்கள் சிலரையேனும் வைத் துக்கொண்டு அதனைச் செய்விக்கவேண்டும். எல்லோரும் எல்லாவற் றையும்செய்வதென்பது அநுபவசாத்தியமானதன்று.

சங்ககாலத்திலும் பிற்காலங்களிலும் பலவகையில் வேறுபாடுடைய புலவர்கள் தமிழ்வளர்ச்சிக்குரிய முயற்சியில் தங்கள் வேற்றுமைகளை மறந்து மனம் ஒன்றி உழைத்தார்கள். சைவர்களும், வைஷ்ணவர்களும், ஜைனர்களும், பௌத்தர்களும் பிறரும் ஒருங்கிருந்து தமிழாராய்ந் திருக்கின்றனர். இதுவரையில் வேறுவிஷயங்களில் இருந்த பேதங்கள் மொழிவளர்ச்சிக்குத் தடைசெய்ததில்லை. இந்தக்காலத்திலோ யாதொரு நலனுமின்றித் தேசம், சாதி, சமயம் முதலியவற்றிலுள்ள கொள்கை வேறுபாட்டைப் பாஷைசம்பந்தமான முயற்சியிலும் சிலர் புகுத்தி வருவது மிகவும் வருந்துதற்குரியது. மனஒற்றுமை நீங்கினல் எந்தக் காரியமும் செய்ய இயலாதாதலின் பலதிறப்பட்ட அறிஞர்களும் ஒன்று கூடி ஒற்றுமையாகப் பழகித் தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

நமக்குப் பல தமிழ்நூல்களை இயற்றியளித்த புலவர்களையும் அவர்களுடைய அருஞ்செயல்களையும் நாம் மறவாமல் அத்தகைய புல வர்களுடைய நாட்களைக் கொண்டாடிவரவேண்டும்.

மதுரையில் ஸேதுபதிவேந்தரவர்களைத் தலைவர்களாகக்கொண்டு விளங்கும் தமிழ்ச்சங்கமும், சென்னைச் சர்வகலாசாலையும், அண்ணா மலை சர்வகலாசாலையும், தனவைசியர்களுடைய சில நகரங்கள் முதலிய வற்றிலுள்ள கலாசாலைகளும், இத் தமிழ்நாட்டிலும் இலங்கையிலுமுள்ள வேறு சில சங்கங்களும் தமிழ்வளர்ச்சியைக் குறித்துப் பல தொண்டு களைச் செய்துவருகின்றன. தமிழறிஞர்களிற் சிலர் தமிழ்நூல்களைப்

பாடஞ்சொல்லும் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றனர். இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் தலைவர்களாகவுள்ளவர்கள் தமிழறிவின்வளர்ச்சியைக் கருதி நிலையானதருமங்களைச் செய்துவருதல் யாவரும் பாராட்டுதற்குரியது.

தமிழ்வளர்ச்சியின்திறத்தில் மேற்கொள்ளக்கூடிய துறைகள் இன்னும் பல இருக்கின்றன. செல்வர்களும் அறிஞர்களும் மற்றவர்களும் தங்கள் தங்கள் ஆற்றலைக்கொண்டு செய்யத்தக்க காரியங்களைச் செய்தால் தமிழ்நாட்டிற்குப் பேருதவியாக இருக்கும்.

இதுகாறும் நான் தெரிவித்தவற்றுள் உசிதமாகத் தோற்றுவனவற்றை ஏற்றுக்கொள்ளும்படி உங்களை வேண்டுகிறேன்.

இங்கே வந்துள்ள தமிழன்பர்கள் தங்கள் தங்கள் அநுபவத்தினால் அறிந்த முறைகளை வெளியிட்டுத் தமிழ்மொழிவளர்ச்சிக்கு உரிய செயல்களை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழன்பர்மகாநாடு கூடியதன் நோக்கம் நன்கு நிறைவேறவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

ஸ்ரீ:

# மதிப்புரை.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்:— [ ஸ்ரீசங்கரபகவத்பாத பாஷ்யத்திற்கும், ஸ்ரீபாராசரபட்டாசார்யபாஷ்யத்திறகும் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு.] இது, [கும்பகோணம் காலேஜ் ரிட்டயர்டு தமிழ்ப் பண்டிதரும், பாஷாபாரததுரந்தருமான] ஸ்ரீ. உ. வே. எம். வீ. ராமாநுஜாசாரியரால் தமிழில் மொழிபெயர்த்துப்பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமம் ஸ்தோத்ரரூபமாகவும், மந்த்ரரூபமாகவும் தொன்றுதொட்டு வைதிகர்களால் அநுஸந்திக்கப்பெற்றுவருவது யாவருமறிந்ததே. அப்படி அநுஸந்திப்பவருள் பெரும்பாலோர் பொருளுணர்ச்சியில்லாமலே அநுஸந்தானம்செய்துவருகிறார்கள். அதுவும் புண்ணியப்பயனளிக்கவல்லதாயினும் பொருளுணர்ச்சியோடு அநுஸந்திப்பதே பகவத் ஸ்வரூப ரூப குணாநுபவம் பண்ணுவதற்கும், பயனடைவதற்கும் மிகவும் சிறந்தது. அப்பொருளுணர்தல் ஸம்ஸ்க்ருத பாஷாபாண்டித்தியத்துடன் வியாகரணம் வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களிலும் மிகுந்த பரிசயமுடைய சிலருக்கே இயல்வதாம். எனையோர்க்கியல்வதன்றாம். இவ்வாறு அறிதற்கரிய பரம்பொருளின் ஆயிரநாமப்பொருளையும் தமிழர்கள் யாவரும் எளிதிலுணர்ந்துய்யும்படி தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டுதவிய மொழிபெயர்ப்பாளரது ஒப்புரவாண்மை பாராட்டத்தக்கது. ஸஹஸ்ரநாமமூலமும், நாமாவளியும் தனித்தனி கிரந்தலிபியிலும், தமிழெழுத்திலும் பதித்துச்சேர்க்கப்பெற்றுள்ளன. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தைப்பற்றி அறியவேண்டிய விஷயங்கள் பலவும் எளிதிலுணரும்படி விரிவான முகவுரை வரையப்பட்டிருக்கிறது. ஸஹஸ்ரநாமத்தை ஒட்டி முன்னும் பின்னுமுள்ள வினாவிடைகளுக்கும், பலசுருதி முதலியவற்றிற்கும் உரையெழுதப்பெற்றிருக்கிறது. உரைநடைமுழுதும் இயல்பான செவ்விய தமிழ்நடையாயுள்ளது. வைதிகாபிமானிகளான தமிழ்மக்களுக்கெல்லாம் இப்புத்தகம் மிகவும் பயன்படத்தக்கது. டெம்மி 300 பக்கங்களுக்குமேலுள்ள இப்புத்தகத்தின் விலை கித்தான் பைண்டு ரூ 3. அரைக்காலிகோ பைண்டு ரூ 2-8-0. தபாற்கூலி அணா 8. விலாஸம்:— ஸ்ரீமத். எம். வி. ராமாநுஜாசாரியர், மணலூர், நரசிங்கம்பேட்டைவழி.

மண்ணியல்சிறுதேர்:- இது, வடமொழியிலுள்ள நவரஸம்ததும்பும் நாடகமாகிய மிருச்சகடிகத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு; மகிபாலன்பட்டி, பண்டிதமணி திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்களா லியற்றப்பெற்றது. இதன் ஆசிரியரவர்கள் மதிநுட்பமும், நூலறிவும், சொல்வன்மையும் செய்யுளியற்றுந் திறனும், பொருள்சிதையாமல் மொழிபெயர்க்குமாற்றலுமுடையரென்று புலவர்களாற்போற்றப்படுவதற்கேற்ப அவ்வருங்குணங்களனைத்தும் ஒருங்குகாணுங் கண்ணாடியாக இந்நூல் இனிதமைந்து விளங்குகின்றது. முதனூலின் பெருமையிற் சிறிதுங் குன்றுவாறு யாக்கப்பெற்றுள்ளமையால், இஃது, செந்தமிழ்நடையிற் சீரிய நாடகக்காப்பியங்கள் இன்னொன்று எழுதப்பெறவில்லையென்ற குறைவை நன்கு நிறைவிக்கின்றது.

இதன் உரைநடை மிக்க விழுப்பமுடையது. சொற்பொருட்சுவை மலிந்த பாக்கள் இடையிடையே தொகுக்கப்பட்டுள்ளன. படிப்பார்க்குப் பயன்றரவல்ல இன்றியமையாத குறிப்புரையொன்றும் இதனுடன் எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது. முகவுரை, கதைச்சுருக்கம், பாத்திரங்களின் பெயர்விளக்கம், செய்யுண்முதற்குறிப்பகராதி முதலியனவும் இதற்குப் பெரிதும் அழகுசெய்துநிற்கின்றன.

மற்றும் இதன் அருமை பெருமைகளை, தமிழ்ப் பெருமக்கள்பலர் மனமுவந்துதவிய சிறப்புப்பாயிரம், அணிந்துரை, மதிப்புரை, ஆராய்ச்சி மதிப்புரை என்னும் பகுதிகளால் நன்கு அறியலாம். அவற்றை இங்கு விரித்துரைத்தல் மிகையெனவிடப்பட்டது. மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி, டாக்டர், வே. சாமிநாதையரவர்கள், சேதுஸமஸ்தான மஹாவித்வான் ஸ்ரீ. ரா. ராகவையங்காரவர்கள், ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் B. Sc. (Lond) அவர்கள், திரு. சோமசுந்தரபாரதியார் M A, B.L. அவர்கள் முதலியோர் இந்நூலையும் நூலாசிரியரையும் பாராட்டியுரைத்த பெருந்தகையாளரில் முக்கியமாகக்குறிப்பிடற்பாலர். இது நிற்க.

'இம்பரி னிவனைத் தந்த முனிவனை யிறைஞ்சு மென்பார்' என்பது போல இத்தகையபுத்தகங்கள்வெளிவருதற்குக்காரணமாய், பண்டிதமணியவர்களை ஊக்கங்கொண்டுழைத்துவரச்செய்துவரும் மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையினருக்குத் தமிழ்மக்கள் நன்றிசெலுத்தக்கடப்பாடுடையர்.

இதன்விலை ரூ 2-4-0. கிடைக்குமிடம்:-தலைவர், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி (P. O.) புதுக்கோட்டை ஸ்டேட்.

திருக்குறள் மூலமும் உரையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்:— இது, [சென்னை ஸ்ரீபார்த்தசாரதிகோயில் போர்டுமெம்பரும் ஆனரெரி பிரஸிடென்ஸிமாஜிஸ்ட்ரேட்டுமாகிய] ஸ்ரீமான் ஆ. அரங்கநாதமுதலியாரவர்களால் பதிக்கப்பட்டது. பலவேறுநோக்கங்களுடன் இதுகாறும் வெளிவந்த திருக்குறளின் தமிழ்ப்பதிப்புக்கள் ஏறக்குறைய முப்பதாம். அவற்றுள் மிகச்சிறந்தவற்றோடு இப் புதியவெளியீடும் சேர்த்தற்குரியது.

இதன் பொழிப்புரை மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் பரிமேலழகர்கருத்தைச் சிறிதும் வழுவாமல் தழுவிச்செல்லுகின்றது. மூலத்திலுள்ள ஆழமும அருமையும் அப்படியே அமையுமாறு இதன் வசனம் சமத்காரமாக எழுதப்பட்டுள்ளது. அது யாவர்க்கும் எளிதினில் விளங்கும் இனிமையும் உடையது.

இதன் ஆங்கிலமொழிபெயர்ப்பும் மிக்க சுவையுடைத்தென்று அறிஞர்கள் நனகுமதிக்கின்றனர். சென்னைக் கல்விமந்திரி கௌரவ திவான்பகதூர் திரு. S. குமாரசாமிரெட்டியாரவர்களும், லெக்ஸிகன் தமிழாசிரியர் ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்களும் இதற்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் முன்னுரைகளெழுதிப் பெருமையளித்துள்ளனர்.

திருக்குறளையும் ஆசிரியரையும்பற்றிய குறிப்புக்கள், ஆக்கியோர் முகவுரை, திருவள்ளுவமாலை, ஆங்கிலஅநுபந்தம் முதலிய பகுதிகளோடுசேர இப்புத்தகம் மிக அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ 2—8—0. விலாசம்– "ஸ்ரீமான் ஆ. அரங்கநாதமுதலியாரவர்கள், சுவர்ணவிலாஸம், 13. பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை."

---

பவ வருட வாக்கியபஞ்சாங்கம்:—இது, யாழ்ப்பாணம் பருத்தித்துறைச் சோதிடகணிதசித்தாந்தி ப்ரும்மஸ்ரீ. சு. சுப்பிரமணிய சாஸ்த்ரிகள் அநுமதிப்படி ஸ்ரீ. சோ. வைத்தியநாதசாஸ்திரிகளால் கணிக்கப்பட்டது. இதில் முஹூர்த்தகாலங்களும், விருததினங்களும், சிராத்ததிதிகளும் நன்கு நிர்ணயஞ்செய்துகுறிக்கப்பட்டுள்ளன; மேலும், ஏர்மங்கலம் முதலியவிடயங்களும் சோதிடசம்பந்தமான பிற பலவிடயங்களும் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி தெளிவாய் எழுதப்பட்டுள்ளன. இதன்விலை அணு 4. வேண்டுவோர் சோ. வைத்தியநாதசாஸ்திரிகள், கலாநிதியந்திரசாலை, பருத்தித்துறை, இலங்கை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

# 1933-௵ ஜனவரி௴ 31௳ (ஆங்கீரஸ௵ தை௴ 19௳) காலை 9-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக ஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-௱-௱-ஸ்ரீ K. ராமையங்கார் அவர்கள், B.A., B.L.,
அக்கிராஸனம் வகித்தவர்.

2. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் B.A., B.L.,
3. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள் B.A., B.L.,
4. ,, S. சோமசுந்தரபாரதி அவர்கள் M.A., B.L.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

I. 1932-௵ டிசம்பர் மாதத்திய வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய (1) கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ ஊ. சா. வேங்கடராமையர் அவர்களையும் (2) மதுரைக் காலேஜ் Superintendent of Tamil Studies மகா-௱-௱-ஸ்ரீ P. R. ஐபாஸ்வாமி ஐயர், B.A., L.T., அவர்களையும் அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கம் அச்சாபீஸ் இப்பொழுது இருக்கிற நிலைமையில் சங்கத்தின் மேலான நன்மைக்கும் நோக்கத்திற்குமிணங்க வேலைசெய்யமுடியாதென்று சங்கத்தின் நிர்வாகசபையார்களுக்குத்தெரிவதால், தற்காலத்திற்கு அச்சாபீஸை மூடிவிடும்படிக்கும் அச்சாபீஸ் சம்பந்தப்பட்ட சிப்பந்திகளுக்கு இதுவரைசெல்லவேண்டிய சம்பளப்பாக்கியுடன் ஒருமாதச் சம்பளம் போனஸ்ஸாகக் கொடுத்து அவர்களை வேலையினின்று உடனே நிறுத்திவிடும்படிக்கும் தீர்மானிக்கலாயிற்று.

IV. மகா-௱-௱-ஸ்ரீ ராமமூர்த்திபந்துலு அவர்களின் ரிப்போட்டிற் கண்டபடி சங்கக்கட்டிடத்தின் மத்திஹால் முதலிய பாகங்களைக் கட்டும் வேலையை உடனே தொடங்கும்படிக்கும் மத்திஹாலின் மேலைச் சுவரில் எவ்வளவிலிருந்து புதிதாகக்கட்டவேண்டியது அவசியமென்று தோன்றுகிறதோ அவ்வளவு கட்டும்படிக்கும் தீர்மானிக்கலாயிற்று. மேற்படி கட்டிடவேலையை மகா-௱-௱-ஸ்ரீ K. ராமையங்கார் B.A., B.L. அவர்களும், சங்கத்தின் கௌரவ காரியதரிசிகளிருவரும் மேற்பார்த்துக்கொள்ளவேணுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

K. ராமையங்கார்,
அக்கிராஸனம்வகித்தவர்.

மதுரை,
31—1—1933.

## 1933-ஞ மார்ச்சுமீ 23உ (ஆங்கீரஸ-ஞ பங்குனிமீ 10உ) காலை 8 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் B A., B L., M.L C, —உப-அக்கிராஸனாதிபதி.
2. „ K. ராமையங்கார் அவர்கள் B.A., B L.
3. „ V. S. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் B A, B L.
4. „ S. சோமசுந்தரபாரதி அவர்கள் M.A., B L.
5. „ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள் B.A, B L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்.

I. 1933-ஞ ஜனவரி பிப்ரவரி மாதங்களின் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. (a) இச்சங்கத்தின் சாசுவத அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய

(1) மகா-ா-ா-ஸ்ரீ பி. நா. சொக்கலிங்கம்செட்டியார் அவர்கள், அலவாக் கோட்டை, இராமநாதபுரம் ஜில்லா.

(2) „ சுப. க. அ. ராமநாதன்செட்டியார் அவர்கள், சோள புரம், இராமநாதபுரம் ஜில்லா.

(3) „ பெரி. அள. மு. முத்துக்கருப்பன்செட்டியார் அவர்கள், பாகனேரி, இராமநாதபுரம் ஜில்லா.

இவர்களைச் சாசுவத அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(b) இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய மதகுபட்டி மகா-ா-ாஸ்ரீ கா. கண. க. வே. வேலாயுதம்செட்டியார் அவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. மதுரையிலுள்ள M. R. C. C Bankல் பிக்ஸெட் டிபாஸிட்டில் வட்டிக்குப்போட்டுவைத்துள்ள தொகை ரூ. 25000த்தையும் மறுபடியும் வட்டிக்குக்கொடுப்பது சம்பந்தமாகச் சங்கத்தின் கௌரவ காரியதரிசிகள் எழுதிய விஷயம் அங்கீகரிக்கலாயிற்று.

IV சங்கக்கட்டிட கண்டிராக்ட்வேலை விஷயமாகச் சங்கத்தின் கௌரவ காரியதரிசிகள் எழுதிய மெமோ படிக்கப்பெற்றது. அதிற் கேட்டுக்கொண்ட படி கட்டிடவேலையைத் தொடங்கிநடத்தலாமென்று தீர்மானிக்கலாயிற்று. இத்தீர்மானம் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டது.

V சங்கம் அச்சாபீஸைச் சீர்திருத்தம் செய்யவும் மறுபடியும் அதன் வேலையைத் தொடங்கவும் அச்சாபீஸ் அனுபவமுள்ளவர்களுடன் சங்கத்தின் கௌரவகாரியதரிசிகள் கலந்து ஆலோசித்து வேண்டுவன செய்யவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

மதுரை,
23—3—1933.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராஸனதிபதி.

---

உ

## 1933-ஹு ஏப்ரல்மீ 26உ (ஸ்ரீமுகஹு சித்திரைமீ 14உ) காலை 9 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் B.A., B.L., M.L.C.,
—உப-அக்கிராஸனதிபதி.
2. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் B.A., B.L.
3. ,, S. சோமசுந்தரபாரதி அவர்கள் M.A., B.L.
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1933-ஹு மார்ச்சுமாத வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. இச்சங்கத்தின் சாசுவத அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய

(1) மகா-ள-ள-ஸ்ரீ A. R. ரெங்காச்சாரி அவர்கள், c/o Chari & Ram, மதுரை.

(2) ,, வெ. சு. முத்துவள்ளியப்பசெட்டியார் அவர்கள், பலவா ன்குடி.

(3) மகா-௱-௱-ஸ்ரீ மெ. வெ. வெ. வேலப்பசெட்டியார் அவர்கள், பலவான் குடி.

(4) ,, ராம. கும. சு. குமரப்பசெட்டியார் அவர்கள், பலவான் குடி.

(5) ,, தொண்டி. லட்சுமணன்செட்டியார் அவர்கள், தேவ கோட்டை.

இவர்களைச் சாசுவத அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கத்தின் ரூபா பதினுபிரத்தைத் திருவாங்கூர் ஸ்டேட் லிமிடெட் பாங்கில் ஒருவருஷகாலத்துக்கு பிக்ஸெட் டிபாஸிட்டில் வட்டிக்குக்கொடுத்து வைக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

IV. சங்கத்தின் 1932—1933 வருஷாந்தக் கணக்குகளைப் பரிசோதனை செய்யும்படி மதுரை ஹைக்கோர்ட்டுவக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

V. சங்கத்தின் கட்டிடவேலைக்காக வாங்கிய இரும்புக்கருடர்களின் கிரயம் ரெயில்சார்ஜ் கூலி வகையராவுக்காகக் கண்டிராக்ட் மொத்தத்தொகையினின்றும் ரூ. 1299—8—0 கண்டிராக்டருக்குக் கொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

VI. 1933—1934ம்ஞூத்துச் சங்கமாபீசு வரவு செலவு மதிப்புத்திட்டம் அங்கீகரிக்கலாயிற்று.

மதுரை,
26—4—1933.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராஸனுதிபதி.

# 1933-ஞ டிசம்பர்மீ 4உ (ஸ்ரீமுக ஞ கார்த்திகைமீ 19உ) காலை 10½ மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாத ஸேதுபதி மஹாராஜா அவர்கள்,—அக்கிராசனாதிபதி.

2. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B.A., B.L., M.L.C., —உப-அக்கிராசனாதிபதி.

3. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள், B.A., B.L.,

4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள், B.A., B.L., —கௌரவ காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

I. 1933-ஞ ஏப்ரல்மீ முதல் நவம்பர்மீ முடிய உள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. இத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய

(a) மகா-ா-ா-ஸ்ரீ C. பன்னிருகைப்பெருமாள் முதலியார் அவர்கள், B.A., B.L., Lecturer in Tamil, ஸையன்ஸ் காலேஜ், திருவனந்தபுரம்.

(b) மகா-ா-ா-ஸ்ரீ K. புவிராஜ சிங்கம் அவர்கள், கல்லடி உப்போடை, காத்தன்குடி போஸ்டு, மட்டக்களப்பு, இலங்கை.

இவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. சிதம்பரம் அண்ணாமலை ஸர்வகலாசாலை செனேட்டுக்குச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரைச் சங்க வருஷோத்ஸவ மஹாஸபைக்கூட்டத்தில் தெரிந்தெடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. மதுரையிலுள்ள M. R. C. C. Bankல் வட்டிக்குக்கொடுக்கப்பட்டுள்ள சங்கம் Fixed Deposit தொகை ரூ. 25011—5—0யும் காலவரையறை கடந்தபின்பு வட்டிக்குக் கொடுப்பதைப்பற்றிய விஷயம் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டதில் (Government Securities) சர்க்கார் ஜாமீன் பத்திரங்களின்பேரில் வட்டிக்குக்கொடுப்பதாயிருந்தால் வட்டி வகையரா என்ன கிடைக்குமென்பதை ஆராய்ந்தறியும்படி தீர்மானிக்கலாயிற்று.

V. சங்கத்தின் மாதாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்வதற்கு ஏற்பாடுகள்செய்யவேண்டியதைப்பற்றிய விஷயம் தள்ளிவைக்கலாயிற்று.

VI. சங்கக்கட்டிடவேலையின் முன்னேற்றத்தைப்பற்றிய விஷயம் ரிக்கார்டுசெய்யலாயிற்று,

VII. சங்கக்கட்டிடவேலைக் கண்டிராக்டரிடமிருந்து கட்டிடவேலைகள் சம்பந்தமாக எழுதிவாங்கியுள்ள புது உடன்படிக்கைப்பத்திரவிஷயமாய்க் கௌரவகாரியதரிசியவர்கள் எழுதிய ரிப்போர்ட்டு அங்கீகரிக்கலாயிற்று.

VIII. சங்கக் கட்டிடவேலைக் கண்டிராக்டருக்கு இன்னும் அட்வான்ஸாக ஆயிரம்ரூபாய் கொடுக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

IX. சங்கம் அச்சாபீஸை மறுபடி சீர்படுத்துகிற விஷய சம்பந்தமான ஆலோசனை தள்ளிவைக்கலாயிற்று.

X. செந்தமிழ்ப்பத்திரிகையைப் பிரஸ் டிக்ளரேஷன் ஆனதும் திரும்ப வெளிப்படுத்திவரலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

XI. மகா-௱-௱-ஸ்ரீ V. சுந்தரமையர் B.A., B.L., அவர்களைச் சங்கத்தின் நிர்வாகஸபை அங்கத்தினராகவும் கௌரவ காரியதரிசியாகவும் தற்காலத்துக்கு நியமிக்கலாயிற்று.

மதுரை.
4—12—'33.

*R. Shanmuga Rajeswaran,*
அக்கிராசனாதிபதி.

---

# அநுதாபக்குறிப்பு.

சென்னையிலிருந்து நாள்தோறும் வெளிவரும் சமாசாரபத்திரிகைகளுள் சிறந்ததாகிய ஹிந்து என்ற ஆங்கிலப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் A. ரங்கஸாமிஐயங்காரவர்கள் நாளது தைமீ 22உ காலமானதுதெரிந்து வருந்துகிறோம். இவர் பலவாண்டு சுதேசமித்திரன் ஆசிரியராயிருந்து அதனைச் சிறப்புற நடத்தியவர்; அரசியலறிவும், பொருணூற்புலமையும், சிறந்த தேசப்பற்றும் வாய்ந்தவர்; பொதுமக்களாலும் அரசாங்கத்தாராலும் தேசப்பற்றுடைய பலவேறு கட்சிப்பெருந்தலைவர்களாலும் நன்குமதிக்கப்பெற்றவர். இவருடைய ஆதரவினால் சுதேசமித்திரனும் ஹிந்துவும் உலகம் நன்குமதிக்கும் நிலையையடைந்தன. இவரையிழந்து வருந்துமவர்க்கெல்லாம் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். [பத்திராசிரியர்.]

---

உ

# 1935-௵ல் முதல் நடைபெறும் மதுரைத் தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப் பரீக்ஷைகளின் பாடவிவரக் குறிப்பு.

---

## I. பிரவேசபரீக்ஷைக்கு.

### 1. இலக்கணம் I.

நன்னூற்காண்டிகை முழுதும் (நாவலர்பதிப்பு).

### 2. இலக்கணம் II.

(1) விசாகப்பெருமாளையர் யாப்பணியிலக்கணங்கள் முழுதும் (சங்கப் பதிப்பு).

(2) யாப்பருங்கலக்காரிகை முழுதும். உரையுடன்.

### 3. இலக்கியம் I.

(1) திருவேங்கடமாலை முழுதும். ... ... உரையுடன்.

(2) திருவாரூர் நான்மணிமாலை முழுதும். (சங்கப்பதிப்பு). ,,

(3) திருவரங்கத்தந்தாதி முழுதும். ,,

(4) விக்கிரமசோழனுலா முழுதும். ,,

(5) மதுரைக்கலம்பகம் முழுதும். ,,

(6) மீநாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் முழுதும். ,,

(7) நீதிநெறிவிளக்கம் முழுதும். ,,

(8) பழமொழி இரண்டாவது 100. (சங்கப்பதிப்பு.) ,,

(9) திருக்குறள் முதல் 24 அதிகாரம், பரிமேலழகருரையுடன் (நாவலர்பதிப்பு).

### 4. இலக்கியம் II.

(1) மணிமேகலையுள், பதிகம் முதல் 10-வது மந்திரங்கொடுத்தகாதை முடிய; உரையுடன்.

(2) வில்லிபாரதத்துள் உத்தியோகபருவம் மட்டும் (சங்கப்பதிப்பு.)

(3) பரஞ்சோதிமுனிவரியற்றிய திருவிளையாடற்புராணத்துள் இந்திரன்பழிதீர்த்தபடலம் முதல் தடாதகைப்பிராட்டியார்திருமணப்படலம் முடிய.

(4) செவ்வைச்சூடுவார் பாகவதத்துள் முதலிரண்டுஸ்கந்தங்கள்மட்டும்.

(5) காஞ்சிப்புராணத்துள் கடவுள்வாழ்த்துமுதல் திருநகரப்படலம் முடிய.

### 5. வசனம்.

(1) மணிமேகலை கதைச்சுருக்கம்.

(2) சேதுநாடுந்தமிழும் (சங்கப்பதிப்பு).

### 6. செய்யுளியற்றல்.

வெண்பா ஆசிரியப்பாக்கள்.

### 7. வியாசம்.

விஷயம் படித்தபாடத்துளிருக்கவேண்டும்.

---

## II. பாலபண்டிதபரீக்ஷைக்கு.

### 1. இலக்கணம் I.

(1) நன்னூல்விருத்தியுரை (சங்கரநமச்சிவாயம்) முழுதும்.

(2) நம்பியகப்பொருள் உரையுடன், முழுதும் (சங்கப்பதிப்பு.)

(3) புறப்பொருள் வெண்பாமாலை உரையுடன், முழுதும்.

### 2. இலக்கணம் II.

(1) யாப்பருங்கலவிருத்தி முழுதும்.

(2) இலக்கணவிளக்கப்பாட்டியல் உரையுடன்.

(3) தண்டியலங்காரம் முழுதும்; உரையுடன்.

### 3. இலக்கியம் I.

(1) கம்பராமாயணத்துப் பாலகாண்டத்துள், காப்புமுதற் கார்முகப்படலம் முடிய.

(2) பத்துப்பாட்டுள் மதுரைக்காஞ்சி, நச்சினார்க்கினியருரையுடன்.

(3) ஐங்குறுநூற்றுள் முதல் நூறு பழையவுரையுடன்.

(4) தஞ்சைவாணன்கோவைமுழுதும் சொக்கப்பநாவலருரையுடன்.

(5) கலிங்கத்துப்பரணிமுழுதும்.

### 4. இலக்கியம் II.

(1) மணிமேகலையுள் 11-ம் காதை முதல் 24-ம் காதை முடிய உரையுடன்.
(2) சிலப்பதிகாரத்துள் மதுரைக்காண்டம் முழுதும்; உரைகளுடன்.
(3) திருக்குறளுட் பொருட்பால் முழுதும்; பரிமேலழகருரையுடன்; (நாவலர்பதிப்பு).
(4) ஐந்திணையைம்பது பழையவுரையுடன். (சங்கப்பதிப்பு.)

### 5. வசனமும் தர்க்கமும்.

(1) உதயணன்கதை முழுதும்.
(2) திருவள்ளுவர். (ஆராய்ச்சி) (சங்கப்பதிப்பு.)
(3) தருக்கசங்கிரகமூலம் முழுதும் (நாவலர்பதிப்பு.)

### 6. செய்யுளியற்றல்.

வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பாக்கள்.

### 7. வியாசம்.

---

## III. பண்டிதபரீக்ஷைக்கு.

### 1. இலக்கணம் I.

(1) நேமிநாதம் முழுதும் உரையுடன் (சங்கப்பதிப்பு).
(2) இறையனார்களவியலுரை முழுதும்.
(3) மாறனலங்காரத்துள்: (1) பொதுவியல், (2) பொருளணியியல்கள்; உரையுடன். (சங்கப்பதிப்பு.)
(4) இலக்கணக்கொத்து முழுதும் உரையுடன்.
(5) பிரயோக விவேகம் முழுதும் உரையுடன்.

### 2. இலக்கணம் II.

(1) தொல்காப்பியத்துள், சொல்லதிகாரம் முழுதும்; சேனாவரையருரையுடன்.
(2) தொல்காப்பியத்துள் பொருளதிகாரத்தில்: (1) மெய்ப்பாட்டியல், (2) உவமவியல், (3) செய்யுளியல், (4) மரபியல்கள்; பேராசிரியர்உரையுடன்.
(3) தொல்காப்பியச்சூத்திரவிருத்திமுழுதும் (சிவஞானமுனிவர் செய்தது.)

## 3. இலக்கியம் I.

(1) சீவகசிந்தாமணியுள், கடவுள்வாழ்த்துமுதல் காந்தருவதத்தையாரிலம்பகம்முடிய; நச்சினார்க்கினியருரையுடன்.

(2) கம்பராமாயணத்துள் அயோத்தியாகாண்டம் மட்டும்.

(3) பெருங்கதை உஞ்சைக்காண்டத்துள் 32-ஆவது காடுபெயர்த்தது முதல் 42-ஆவது நங்கைசீராட்டியது முடிய.

(4) பெரியபுராணத்துள், கடவுள்வாழ்த்துமுதல் விறன்மிண்டநாயனார் புராணம்முடிய (நாவலர்பதிப்பு.)

(5) திருக்கோவையார்முழுதும் பழையவுரையுடன். (நாவலர்பதிப்பு.)

## 4. இலக்கியம் II.

(1) மணிமேகலையுள் 25-ம்காதைமுதல் முழுதும்; உரையுடன்.

(2) புறநானூற்றுள் முதல் நூறுசெய்யுள்; பழையவுரையுடன்.

(3) அகநானூற்றுள் முதலைம்பதுசெய்யுள்.

(4) கலித்தொகையுள்: (1) பாலைக்கலியும் (2) மருதக்கலியும்; நச்சினார்க்கினியருரையுடன்.

(5) பரிபாடலுள் முதற் பத்துப்பாட்டு, பரிமேலழகருரையுடன்.

(6) பதிற்றுப்பத்துள் 2, 3, 4, 5, பத்துக்கள்; பழையவுரையுடன்.

(7) திருக்குறளில், துறவறவியலும் காமத்துப்பாலும்; பரிமேலழகருரையுடன் (நாவலர்பதிப்பு.)

## 5. வசனமும் தர்க்கமும்.

(1) மதங்கசூளாமணி முழுதும் (சங்கப்பதிப்பு.)

(2) சேரர்தாயமுறை (சங்கப்பதிப்பு.)

(3) தருக்கசங்கிரகதீபிகை முழுதும் (நாவலர்பதிப்பு.)

## 6. செய்யுளியற்றல்.

பாவும் பாவினங்களும்.

## 7. வியாசம்.

---

*R. Shanmuga Rajeswaran,*
அக்கிராஸனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

---

மீனலோசனி பிரஸ், மதுரை—33.